கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொபது.,
கட்டட (க & ப) வட்டம், வேலூர் –1.

பிறப்பிப்பவர் : பொறி. K.P.சத்தியமூர்த்தி, பி.இ., எம்.சி.ஏ., எம்.ஐ.இ.,
பொறுப்பு கண்காணிப்புப் பொறியாளர், பொபது., (க/பொ)

செ.பொ.(க) விழுப்புரம்
செ.பொ :
நே.மு.உ :
கோப்பு :
க.கா :

செயல்முறை எண், நி2 / 1888 / 2020 / நாள்.14.06.2021.
பிலவ வருடம், வைகாசி மாதம் 31, திருவள்ளுவராண்டு 2052

887
விழுப்புரம்

பொருள் : பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.கே.சசிகுமரன் த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.மு.காசிராஜன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 01.08.2018.
2) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு.1) துறை, நாள் : 23.01.2020.
3) செயற்பொறியாளர், பொபது., கட்டட (க & ப) கோட்டம், விழுப்புரம் அவர்களின் கடித எண். 468 / 2020 / நிஉ2 / நாள்: 02.11.2020.
4) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு.1) துறை, நாள் : 26.02.2021.
5) அரசு கடித எண். 851 / பி1 / 2021–2, நாள் : 24.03.2021.
6) முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொபது., சேப்பாக்கம், சென்னை, அவர்களின் கடித எண். நி3(3) / 16148 / 2020 / நாள்: 15.04.2021.
7) செயற்பொறியாளர், பொபது., கட்டட (க & ப) கோட்டம், விழுப்புரம் அவர்களின் கடித எண். 643 / 2021 / நிஉ1 / நாள்: 06.05.2021.

*****

உதவி செயற்பொறியாளர், பொபது., கட்டட (க&ப) உபகோட்டம், மருத்துவப்பணிகள், விழுப்புரம் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.மு.காசிராஜன், கடந்த 13.06.2012 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர் / மகன் திரு.கே.சசிகுமரன் என்பவர் 25.02.2013 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தனியருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, செயற்பொறியாளர், பொபது., கட்டட ( க & ப) கோட்டம், விழுப்புரம் அலுவலகத்தில் 08.03.2019 முற்பகல் முதல் அப்பதவியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் மார்ச் 2001–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியர் பிறந்த தேதி 23.03.1985 என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கோரி அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரு பார்வை 5–ல் காணும் அரசு கடிதத்தின் மூலம் அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை நாள்.26.02.2021–இன்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு.கே.சசிகுமரன், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து விதித்தளர்வு எதுவும் எழாத நிலை உள்ளது என பார்வை 7–இல் காணும் செயற்பொறியாளரின் கடித எண். 643 / 2021 / நிஉ1 / நாள்: 06.05.2021 தேதியில் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

எனவே திரு.கே.சசிகுமரன், இளநிலை உதவியாளர், அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 08.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி 28(1)–இன்படி பணிவரன்முறை செய்து 3 ஆண்டுகள் தொடர் பணிகாலத்தில் 2 ஆண்டுகள், தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது., சார்பில்
கட்டட (க & ப) வட்டம், வேலூர்–1.

14/06/2021

பெறுநர்

திரு.கே.சசிகுமரன்,
இளநிலை உதவியாளர்,
வழி : செயற்பொறியாளர், பொபது., கட்டட (க&ப) கோட்டம், விழுப்புரம்.

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம், பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

~~நகல்:~~ செயற்பொறியாளர், பொபது., கட்டட (க&ப) கோட்டம், விழுப்புரம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

நகல்: உபரி.

உ.மு.எண் 887 / நிஉ-1 / 2021 / நாள்: 8.7.2021

செயற்பொறியாளர், பொ.ப.து.
கட்டடம் (க & ப) கோட்டம்,
விழுப்புரம்.

8/7/2021

8.7.2021

அனுப்பப்பட்டது
9/7/2021

Z:\E-2\Comp K Shashi Kumaran Reg Proceedings\Proceedings.docx